NA

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal (Academic) Level

# தமிழ் 1198/3

தாள் 3

# LISTENING COMPREHENSION

**TAMIL**
Paper 3

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**About 30 minutes**

Additional Materials: Personalised Multiple Choice Answer Sheet (PMCAS)

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 உன்னிடம் கூறப்படும்வரை நீ இந்தப் பக்கத்தைத் திருப்பக்கூடாது.

2 உன்னிடம் வழங்கப்பட்டுள்ள தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் (PMCAS) உன்னுடைய பெயர், பதிவு எண் ஆகியவை சரியாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.

3 இவ்வினாத்தாளில் 10 வினாக்கள் இடம்பெற்றுள்ளன.

4 ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் மிகப் பொருத்தமான விடை. அவ்விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) நீள்வட்டத்தை உனது தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் நிழலிடவும்.



Singapore Examinations and Assessment Board

©MOE

ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) நீள்வட்டத்தைத் தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் நிழலிடவும்.

பனுவல் 1

1 மகாத்மா காந்தி நேர்மை குறித்துத் தாம் கொண்டிருந்த எண்ணத்தை ஏன் மாற்றிக்கொண்டார்?

(A) அவர் தமது நேர்மைக்குக் கிடைத்த பாராட்டை விரும்பாததால்
(B) அவர் நேர்மையாக நடந்துகொள்வதை இயல்பான ஒன்று என நினைத்ததால்
(C) அவர் நேர்மையுடன் நடந்துகொண்டபோது பலமுறை அவமானத்திற்கு உள்ளானதால்
(D) அவர் நேர்மையாக நடந்துகொண்டபோது அடிக்கடி பெருமைப்பட்டுக் கொண்டதால்

பனுவல் 2

2 ஃபேஸ்புக் வழியாக முன்பின் தெரியாதவர்களுடன் நட்புக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று குமரனின் அம்மா கூறக் காரணம் என்ன?

(A) அவர்கள் குமரனை ஏமாற்ற வாய்ப்பிருப்பதால்
(B) அவர்கள் குமரனின் விவரங்களை அறிந்துகொள்வதால்
(C) அவர்கள் குமரனோடு வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பதால்
(D) அவர்கள் குமரனுக்கு அறிமுகம் இல்லாதவர்களாக இருப்பதால்

பனுவல் 3

3 மினிசோட்டா மாநிலத்தின் சிறப்பு அம்சம் யாது?

(A) அது ஏரிகள் கொண்டு உருவான மாநிலமாக இருப்பது
(B) அது கண்ணைக் கவரும் இடங்களைக் கொண்டிருப்பது
(C) அங்கு விண்ணை முட்டும் கட்டடங்கள் நிறைந்திருப்பது
(D) அங்குள்ள ஏரிகள் அமைப்பிலும் தன்மையிலும் வேறுபட்டிருப்பது

பனுவல் 4

4 அருணுக்கு எது மிகவும் வருத்தமளித்தது?

(A) மக்கள் பிளாஸ்டிக் பைகளைக் குப்பைகளாக வீசுவது
(B) ஒவ்வோர் ஆண்டும் கடற்கரை சுத்தம் செய்யப்படுவது
(C) கடற்கரையில் குப்பையின் அளவு கட்டுப்படுத்தப்படாமல் இருப்பது
(D) மக்கள் பிளாஸ்டிக் பைகள் ஏற்படுத்தும் தீங்குகளைப் புரிந்துகொள்ளாமல் இருப்பது

5 பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் சிக்கல்கள் எப்போது தீரும்?

(A) மக்கள் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதை நிறுத்தும்போது
(B) பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கும்போது
(C) பிளாஸ்டிக் பைகளுக்கு எதிராக இயக்கங்களை நடத்தும்போது
(D) பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாகத் துணிப்பைகளைப் பயன்படுத்தும்போது

பனுவல் 5

6 பழங்காலத்தில் முக்கனிகளுக்குச் சிறப்பிடம் வழங்கப்பட்டதை எவ்வாறு அறியலாம்?
(A) பழந்தமிழர்கள் அவற்றை அதிகம் பயிரிட்டதன்வழி
(B) தமிழ் இலக்கியங்கள் அவற்றைச் சிறப்பித்துக் கூறியுள்ளதன்வழி
(C) தமிழ் இலக்கியங்களில் அவற்றைப் பற்றிய செய்திகள் உள்ளதன்வழி
(D) பழந்தமிழர்கள் அவற்றை முக்கிய நிகழ்ச்சிகளில் விரும்பிப் பயன்படுத்தியதன்வழி

7 மாம்பழத்தின் சுவையைப் பிற நாட்டினரும் அறிந்துகொள்ள எது உதவியது?
(A) போர்ச்சுக்கீசியர்கள் இந்திய மாம்பழங்களை விரும்பி உண்டது
(B) போர்ச்சுக்கீசியர்கள் இந்திய மாம்பழங்களைப் பிற நாடுகளில் அறிமுகம் செய்தது
(C) போர்ச்சுக்கீசியர்கள் பலவிதமான மாம்பழங்களை உருவாக்கக் கடுமையாக உழைத்தது
(D) போர்ச்சுக்கீசியர்கள் பிற நாட்டினருக்காகப் பலவிதமான மாம்பழ வகைகளை உருவாக்கியது

பனுவல் 6

8 சிறுவன் வேலையை இழந்தவருக்குச் செய்தித்தாளை ஏன் இலவசமாகக் கொடுத்தான்?
(A) அவர் செய்தித்தாளை வாங்காமல் சென்றதால்
(B) சிறுவன் அவரது நிலையை எண்ணி வருந்தியதால்
(C) செய்தித்தாளை வாங்க அவரிடம் பணம் இல்லாததால்
(D) அவர் வேலையை இழந்து தவிக்கிறார் என எண்ணியதால்

9 பணக்காரர் எதற்காகத் தமக்கு உதவிய சிறுவனைத் தேடிச் சென்றார்?
(A) அவனை மீண்டும் காண வேண்டும் என்பதற்காக
(B) அவன் தமக்குத் தக்க நேரத்தில் உதவியதற்காக
(C) அவனால் தாம் பெற்ற பயனை எடுத்துக் கூறுவதற்காக
(D) அவன் தமக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறு செய்வதற்காக

10 செய்தித்தாள் விற்ற சிறுவனின் செயல் பணக்காரருக்கு எதனை உணர்த்தியது?
(A) பலனை எதிர்பார்க்காமல் உதவுவது நன்மை தரும்
(B) ஒருவர் செய்த உதவியை என்றும் மறக்கக்கூடாது
(C) உதவுவதற்குப் பணத்தைவிட நல்ல உள்ளமே முக்கியம்
(D) பணம் இல்லாதபோதும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும்

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.